DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC No.51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW13 |
| Name | : | மூர்த்தி |
| Father's / Husband's Name | : | கண்ணன் |
| Age | : | 62 |
| Religion | : | இந்து |
| Calling | : | |
| Caste | : | வன்னியர் |
| Village | : | அம்மூர் |
| Date | : | 30.01.2020 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கடைசியாக 30.06.2016ம் தேதியில் வாலாஜா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்று தற்போது அம்மூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 24.10.2015 அன்று சாலை ரோந்து பணியில் இருந்தபோது என்னுடன் ஓட்டுனர் ராஜசேகர், சுல்தான் ஆகியோருடன் பணியில் இருந்தபோது மாலை சுமார் 4.45 மணியளவில் கே.எச். லெதர் கம்பனி அருகில் பாலத்தின் அடியில் வாகன தணிக்கை செய்யும் போது வாலாஜாவில் இருந்து இராணிப்பேட்டை நோக்கி இருசக்கர வாகனத்தில் 2 பேர் எங்களிடம் வந்து தகவல் கொடுத்தார்கள். அதில் இண்டிகா காரில் ஒரு பெண்ணை கடத்துகிறார் என்றும் பேனட்டின் முன்பகுதியில் ஒருவர் பிடித்துகொண்டு போகிறார் என்றும் கார் வேகமாக செல்கிறது என்றும் சொன்னதின் அடிப்படையில்

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும் இரத்தினகிரி காவல் நிலையத்திற்கும் மற்றும் சத்துவாச்சாரி காவல் நிலையத்திற்கும் தகவல் கொடுத்து அந்த காரை பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தேன். இரத்தினகிரி பாலத்தின் மேல் இண்டிகா காரின் பேனட்டில் தொங்கி கொண்டு வந்த நபர் கீழே விழுந்து ரத்தக்காயத்துடன் கிடந்தார். அவரை ஆம்புலன்ஸ் மூலம் வாலாஜா அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து சாலை போக்குவரத்தை சீர் செய்து நிலையம் வந்து சேர்ந்தேன். அப்போது தான் அடிப்பட்ட நபர் முனுசாமி மகன் சிவகுமார் என்பது தெரியவந்தது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC No.51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW14 |
| Name | : | சங்கர் |
| Father's / Husband's Name | : | ஆறுமுகம் |
| Age | : | 27 |
| Religion | : | இந்து |
| Calling | : | கூலி |
| Caste | : | ஆதிதிராவிடர் |
| Village | : | வாலாஜா |
| Date | : | 30.01.2020 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் வாலாஜாவில் குடியிருக்கிறேன். 24.10.2015 அன்று இரவு 9, 9.30 மணியளவில் நானும் அசோக்குமார் உதவும் பறவைகள் என்ற டீக்கடையில் நாங்கள் டீக்குடித்துவிட்டு பேசிக்கொண்டு வந்துகொண்டிருந்தோம். அப்போது சிவக்குமார் வீட்டிற்கு பின்னால் ஆட்கள் கூடி நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு காரில் சிவக்குமாரின் மகளான மணப்பெண்ணை கூட்டிச்சென்றதாகவும் பேசிக்கொண்டார்கள். அதன் பிறகு போலிசார் அந்த இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள். போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மட்டும் வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் நானும் அசோக்குமாரும் சாட்சி கையெழுத்து போட்டோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.2. மறுநாள் காலையில் இரத்தினகிரி தாண்டி சத்துவாச்சாரியில் விபத்து நடந்த

இடத்தில் போலிசார் பார்வையிட்டு  பார்வை மகஜர் மட்டும் வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் நானும் அசோக்குமாரும் சாட்சி கையெழுத்து போட்டோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.3. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள்  தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இராணிப்பேட்டையில் உள்ள சாலீம் ஷூ கம்பெனியில் நான் வேலை பார்க்கிறேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3ல் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரம் தெரியுமா என்றால் விபத்து நடந்தது பற்றி எழுதியுள்ளார்கள். இரண்டிலுமே விபத்து என்று தான் எழுதியுள்ளார்கள். கையெழுத்துக்களை நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கையெழுத்து போடவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC No.51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW15 |
| Name | : | காந்தி |
| Father's / Husband's Name | : | சாம்பசிவம் |
| Age | : | 38 |
| Religion | : | இந்து |
| Calling | : | ஓட்டுநர் |
| Caste | : | அகமுடையார் |
| Village | : | வாலாஜா |
| Date | : | 30.01.2020 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் வாலாஜாவில் குடியிருந்து வருகிறேன். 30.10.2015 அன்று ஆற்காடு கிராமிய காவல் ஆய்வாளர் என்னை திருவண்ணாமலைக்கு அழைத்து சென்று கார்த்தி என்பவரின் அப்பாவை விசாரித்தார். அப்போது அவர் மாப்பிள்ளை ஆனந்தபாபு பெங்களூரில் இருப்பதாகவும் சொன்னதன் பேரில் நானும் சதீஷ்குமார், ஆய்வாளர் மற்றும் போலிசாருடன் பெங்களூர் சென்றோம். பெங்களூரில் ஆனந்தபாபுவை போலிசார் விசாரித்தார்கள். அப்போது ஆனந்தபாபு நடந்த சம்பவங்களை சொன்னார். ஆனந்தபாபு சொன்னதை போலிசார் வாக்குமூலமாக பதிவு செய்துகொண்டார்கள். அப்போது ஆனந்தபாபு கொலைக்கு பயன்படுத்திய கார் மற்றும் 2 நபர்களை காட்டுவதாக சொன்னார். ஒப்புதல்

வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4. ஆனந்தபாபு தான் மற்ற 2 நபர்களின் வீட்டையும் காட்டினார். அதன் பிறகு அருண்குமார் வீட்டருகில் இருந்த காரினை கைப்பற்றுதல் மகஜர் மூலம் போலிசார் கைப்பற்றினார்கள். அதில் நானும் சத்தீஷ்குமார் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**